# சுகாதார நல மையம் தொடக்க விழா

காரைக்குடி, செப்.6: காரைக்குடி அருகே மித்ரா வயலில் அருணாசலம் செட்டியார் வளாகத்தில் ஏ.சி. முத்தையா முதன்மை சுகாதார நல மையத் தொடக்க விழா நடந்தது. அருண் பொது நல அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் அருண் வரவேற்றார். குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் தொடங்கி வைத்தார். டாக்டர் ஏ.சி. முத்தையா தலைமை வகித்தார். குழந்தைக் கவிஞர் செல்லகணபதி, ஊராட்சித் தலைவர் வெள்ளைச்சாமி, உள்பட பலர் கலந்துகொண்டனர். அறக்கட்டளை அறங்காவலர் ராஜசேகர் நன்றி கூறினார்.